CENTRE FOR POLICY RESEARCH

NAMATI
INNOVATIONS IN LEGAL EMPOWERMENT





# துல்லியமாக ஆய்தல்





ஒரு வழி முறைக்குறிப்பு

மே 2018 தமிழாக்கம் - Citizen consumer and civic Action Group (CAG), Chennai. 044-24994458, www.thermalwatch.org.in

# சுற்றுச்சூழல் இணக்கத்திற்கான சட்டப்பூர்வ அதிகாரமளித்தல்:
# துல்லியமாக ஆய்வதற்கான முறையைப் பயன்படுத்தல்







## துல்லியமாக ஆய்வது என்றால் என்ன?

துல்லியமாக ஆய்வது என்பது ஒரு தளத்தில் அல்லது ஒரு இடத்தில் அடிப்படை உண்மைகளுடன் அதிகாரப்பூர்வ ஆவணங்கள் மற்றும் வரை படங்களில் தெரிவிக்கப்பட்டுள்ள உண்மைகளை ஒப்பிடுவது என்று விரிவான அளவில் பொருள்படுகிறது. ஆவணங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளக் கூற்றுகளை சரிபார்ப்பதற்கான ஒரு முறையாக, துல்லியமான ஆய்வு என்பது சட்டத்திற்கு விரோதமான, தடை செய்யப்பட்ட அல்லது ஊறு விளைவிக்கும் செயல்பாடுகள் பற்றிய உண்மைகளை எளிதில் கவனிக்கத்தக்க சேகரிப்பதன் மூலம் ஆதாரத்தை உருவாக்குவதற்கான ஒரு ஆற்றல் மிக்க கருவியாக செயல்படுகிறது. தொடர்புடைய ஒழுங்கு முறை ஆணையம், மேல்முறையீட்டு அமைப்பு அல்லது நீதித்துறை அமைப்புக்கு புகார்களை அனுப்புவதற்கு இந்த ஆதாரங்கள் பயன்படுத்தப்படலாம். இந்த முறையானது ஒருமுறை விசாரணைகளுக்கு அல்லது நடப்பிலிருக்கும் விளைவுகள் குறித்த கண்காணிப்புகளுக்கும் பயனுள்ளதாக இருக்கும்.

உதாரணத்துக்கு, ஒரு தொழிற்சாலைக்கான சுற்றுச்சூழல் ஒப்புதல் அல்லது உரிமம், அருகில் உள்ள ஆற்றில் கழிவுகளை வெளியேற்றக்கூடாது என்று தெரிவித்தால், இந்த குறிப்பிட்ட நிலைமை இணக்கமாக இருக்கிறதா இல்லையா என்பதை காட்டுவதற்காக தேதி/நேரம்/இடத்துடன் கூடிய புகைப்பட ஆதாரம் உருவாக்கப்படலாம். வெளியேற்றப்படுவதற்கான அடுக்கு நிகழ்வு / அட்டவணையைக் காட்டுவதற்காக ஒரு வாரத்தின் வெவ்வேறு நேரங்களில் எடுக்கப்பட்டுள்ள புகைப்படங்களுடன் காட்சி ஆதாரங்கள் தயாரிக்கப்படலாம்.

## துல்லியமான ஆய்வு ஏன் தேவைப்படுகிறது?

பல்வேறு நாடுகளில்,தொழிற்சாலை மற்றும் உள்கட்டமைப்புத் திட்டங்களை அமைப்பதற்காக ஒழுங்கு முறை செயல்முறைகள் இருக்கின்றன.

இந்தத் திட்டங்களின் சுற்றுச்சூழல் மற்றும் சமூகத்

நிலங்களில் கொட்டுவது, தக்க வைக்கும் சுவர்களின்

தாக்கங்களை குறைப்பதற்கு அல்லது மட்டுப்படுத்துவதை இந்த செயல் முறைகள் நோக்கமாக கொண்டுள்ளன. இது திட்டங்களுக்கான ஒரு நிபந்தனை சார்ந்த ஒப்புதல்களுக்கான ஒரு அமைப்பு அல்லது அவர்களால் செயல்படுத்தப்படும் கட்டாயமான பாதுகாப்புகளுக்கான ஒரு பட்டியலைக் கொண்டு அவர்களைக் கட்டுப்படுத்துவதன் மூலம் செய்யப்படுகிறது. துல்லியமான ஆய்வு என்பது இந்த நிபந்தனைகள் மற்றும் பாதுகாப்புகள் சிறப்பான வெளிப்பாடுகளுடன் மற்றும் அவற்றினை விளைவிப்பதில் இணக்கமாக உள்ளனவா என்பதை மதிப்பிடுவதற்கு தேவைப்படுகிறது.

திட்ட உருவாக்குநர், அரசாங்கங்கள், மற்றும் சமூகங்களிடையே ஒப்புக்கொள்ளப்பட்டு கையொப்பமிடப்படும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், குத்தகை ஒப்பந்தங்கள் மற்றும் உடன்படிக்கைகளும் இருக்கினற்ன. இந்த ஆவணங்கள் பல்வேறு தரப்பினரால் செய்யப்படுகிற பல்வேறு பொறுப்புகளையும் கொண்டிருக்கின்றன. இந்தப் பொறுப்புகள் உயர்த்தி பிடிக்கப்படுகின்றனவா மற்றும் எந்த அளவுக்கு என்பதை கண்காணிப்பதற்கு துல்லியமான ஆய்வு பயனுள்ளதாக இருக்கிறது.

## துல்லியமான ஆய்வினையார் plastic bucket செய்யலாம்?

துல்லியமான ஆய்வுமுறை மூன்று வெவ்வேறு நிலைகளில் பயன்படுத்தப்படலாம்:

- **பொது நல உணர்வுள்ள தனி நபர்கள் மற்றும் சிறு குழுக்கள்:**
எ.கா,: முக்கிய உள்ளூர் தகவல் தெரிவிப்பவர்கள் உடன் சுற்றுச்சூழல் அல்லது உரிமை அடிப்படையிலான நிறுவனங்கள்

- **சமூகப் பிரதிநிதிக் குழுக்கள்:**
எ.கா,: பாதிக்கப்பட்ட மக்கள் அல்லது கிராமக் குழு உறுப்பினர்கள்

- **சட்டப்பூர்வ அதிகாரமளித்தல்/சுற்றுச்சூழல் நீதிக்கான சட்டப்பூர்வ அதிகாரமளித்தல்/துணைசட்டத் திட்டங்கள்:**
(எ.கா.) துணைச் சட்டங்களடன் கூடியபாதிக்கப்பட்ட சமூகங்கள் தாக்கங்களை சேகரித்து நிவாரணங்களைக் கோருவது.

## எந்த நிலையில் துல்லிய ஆய்வு செய்யப்பட வேண்டும்?

- **முன் ஒப்புதல்:** ஒப்புதல் பெறுவதற்காக வழங்கப்பட்ட உண்மைகள் மற்றும் அடிப்படைத் தகவல்களை உறுதி செய்வதற்காக. எ.கா. சுற்றுச்சூழல் தாக்கமதிப்பீட்டு அறிக்கைமற்றும் ஒப்புதல் விதிகளுடன் இணக்கம்

- **கட்டுமானத்தின் போது:** திட்டம் உருவாக்கப்பட்டுகிற பாதுகாப்புகள் மற்றும் நிலைமைகளை உறுதிப்படுத்துவது. எ.கா., வீடுகளுக்கு அல்லது புனிததலங்களுக்கு பாதிப்பு, ஆறுகள் அல்லது விவசாய கட்டுமானம், ஆக்கிரமிப்புகளைக் கட்டுப்படுத்துவது மற்றும் புனர்வாழ்வுத் திட்டங்கள்.

- **ஒப்புதலுக்கு பின்:** ஒரு உரிமத்தின் சட்டப்பூர்வ நிலைமைகளுக்கான இணக்கம், ஒப்புதல் மற்றும் ஒப்பந்தங்களை செயல்பாட்டில் இருக்கும் போதே கண்காணித்தல். எ.கா., நீர் மாசுபடுவதைத் தடுத்தல், மூலப்பொருட்களின் போக்குவரத்துத் தொடர்பான பாதுகாப்புகள், செயல்பாடும் உமிழ்வு கட்டுப்பாட்டு சாதனங்கள் மற்றும் நிலத்தடி நீரை எடுப்பதை ஒழுங்குப்படுத்துவது.

## எதைத் துல்லியமாக ஆய்வு செய்வது?

துல்லியமான ஆய்விற்கான கூறுகளை அடையாளம் காண்பது என்பது இந்த முறைக்கான ஒரு அத்தியாவசியமான கூறாகும். கூறுகள் கவனமாக தேர்ந்தெடுக்கப்படவேண்டும். இந்த தேர்வுடன் உதவும் சில பொதுக் கொள்கைகள், பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

**அதிகாரப்பூர்வ தரவின் கிடைக்கும் தன்மை.** கூறப்படும் தாக்கங்களுடன் நிலைமைகளை ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு ஒப்புதல் கடிதங்கள், தாக்க மதிப்பீடு அறிக்கைகள் மற்றும் பாதுகாப்புத் திட்டங்கள் கிடைக்கப் பெறும் போது, இந்த முறை மிகவும் ஆற்றல் மிக்கதாக இருக்கும்.

**தளத்திற்கான அணுகல்:** புகைப்படங்கள், நீர்மாதிரிகள், மற்றும் ஜிபிஎஸ் (குளோபல் பொசிஷனிங் சிஸ்டம்) அமைவிட ரேகைகள் போன்ற கவனிக்கத்தக்க ஆதாரங்களை சேகரிப்பதற்காக தாக்கம் ஏற்படும் தளங்களங்களை அணுகுவதற்கான சாத்தியத்தினை இந்த முறை சார்ந்திருக்கிறது.

**நிறுவனம் சார்ந்த இணைப்புகளுக்கான அறிவு:** இந்த ஆதாரங்களை எந்த நிறுவனத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும் என்கிற அறிவு ஆதாரங்களை சேமிக்கும் நபருக்கு இருப்பது இந்த முறைக்குத் தேவைப்படுகிறது. வெவ்வேறு நிறுவனங்களுக்கு அவற்றிற்கான சொந்த வடிவங்கள் அல்லது ஆதார வகைகள் மற்றும் புகார்க தேவைப்படலாம்.

**ஒன்றுக்கு மேற்பட்ட ஆதாரங்கள்:** ஒன்றுக்கு மேற்பட்ட ஆதாரங்களை அளிக்கக்கூடிய அறிக்கைகளை துல்லியமாக ஆய்வு செய்வது சிறப்பானதாகும். பிரதிவிதி மீறல், சட்டவிரோதத்தன்மை அல்லது தாக்கத்திற்கான ஆதாரங்களில் மூன்றுதுண்டுகளை சேகரிப்பதற்கு ஒரு ஒழுங்குமறை நிறுவனம் அல்லது தீர்வுமுறை அமைப்புத் தூண்டப்படவேண்டும் என்பது ஒரு முக்கிய கடை பிடிக்க வேண்டிய விதியாகும். இது முக்கோண அளக்கை என்று அழைக்கப்படுகிறது. எ.கா.,கழிவு வெளியேற்றத்திற்கான ஒரு புகைப்படம் ஒரு முன்னதான ஒரு ஒழுங்கு முறை நிறுவனத்தின் காரணக் காட்சி அறிவிக்கை அல்லது குறிப்பிட்ட நடவடிக்கை/முகமை/திட்டத்திற்கு அறிவிக்கையின் காரணத்தைத் தெரிவிக்கும் ஊடக அறிக்கைகள் துணை செய்யலாம்.

## சட்டரீதியான அதிகாரமளித்தலின் வெளிப்பாடு மற்றும் துல்லியமாக ஆராய்தலின் செயல்முறை.

சட்ட ரீதியான அளித்தலுக்கான செயல் முறையோடு சட்ட அறிவினை சமூகங்களுக்கு வழங்குவதற்கான ஒரு வெளிப்பாட்டில் ஒரு முக்கியமான கூறாக துல்லியமாக ஆய்வு செய்தல் இருக்கலாம். சமூக மற்றும் சுற்றுச்சூழல் நீதித்தொடர்பான திட்டங்களை துணை சட்டத்திட்டங்களை சமூகத்திற்கு வழங்கும் போது, துல்லியமாக ஆய்வு செய்தல் முறை நம்பகமான தொடர்புடைய ஆதாரத்தை சேகரிப்பதற்காக பயன்படுத்தப்படலாம்.

அவர்களுடன் சட்ட அறிவு பகிர்ந்து கொள்ளப்பட்டிருந்தால் மட்டுமே சமூகம் அளவில் இதை மேற்கொள்வது சாத்தியமாகும்.
சுற்றுச்சூழல் இணக்கத்தின் மீதான சட்டப்பயிற்சிகளின் ஆற்றலை மதிப்பிடுவதற்கான ஒரு நடைமுறையாக இது செய்யப்படலாம். சமூக ஏற்பாட்டாளர்கள் மற்றும் துணை சட்டவியலாளர்கள் இந்த முறையை, தீர்வுகளைக் கோரும் தங்கள் வழக்குகளின் ஒரு பகுதியாக உள்ளிடலாம் (கீழே உள்ள பார்வைகளைக் காணவும்). உள்ளூர் அரசாங்க நிறுவனங்கள் மற்றும் கிராமக் குழுக்களின் தாக்கங்களை கண்காணிப்பதற்கான ஒரு முறையாக இது பரிந்துரைக்கப்படுகிறது.

**மேலும் தகவல்களுக்கு**

காஞ்சிகோஹ்லி
சட்டஆராய்ச்சி இயக்குநர்
சிபிஆர்-நமதிசுற்றுச்சூழல் நீதித் திட்டம்
kanchikohli@namati.org

மஞ்சுமேனன்
திட்ட இயக்குநர்
சிபிஆர்-நமதி சுற்றுச்சூழல் நீதித் திட்டம்
manjumenon@namati.org

www.namati.org | www.cprindia.org

பார்வைகள்

- அமலாக்க இடைவெளியை மூடுதல்: கட்ச்சில் உள்ள முந்த்ராவில் சமூகத்தால் முன்னெடுக்கப்பட்ட சுற்றுச் சூழல் விதி மீறல்களுக்கான துல்லியமான ஆராய்தலின் முடிவுகள் (https://namati.org/resources/closing-the-enforcement-gap-findings-of-a-community-led-ground-truthing-of-environmental-violations-in-mundra-kutch/), 2013
- சிபிஆர்-நமதி சுற்றுச்சூழல் நீதி வழக்கு தடம்பற்றும் படிவம், 2015
- சிபிஆர்-நமதி சுற்றுச்சூழல் நீதி திட்டத்தின் சமூக அளவிலான சுற்றுச்சூழல் நீதித் தொழில்பயில்வோருக்கான சட்டப்பூர்வ மற்றும் நிர்வாக தீர்வு முறைகளின் கையேடு (பதிப்புரு 1),பிப்ரவரி 2016
by CPR-Namati Environmental Justice Program
- சிபிஆர்-நமதி சுற்றுச்சூழல் நீதி திட்டத்தின் துணை சட்டபயிற்சி வழிகாட்டி, பதிப்புரு 1.0 (இறுதியாக்கம் செய்யப்பட்டு வருகிறது)
- அச்சுறுத்தலுக்கு சவால் விடுதல்: காஞ்சி கோஹ்லி, மஞ்சுமேனன், கல்பவிருக்ஷ, புதுடெல்லி/புனேவின் சுற்றுச்சூழல் ஒப்புதல் வழங்கல் நிபந்தனைகளுக்கான கண்காணிப்பு மற்றும் இணக்கத்தின் நிலையை வெளிப்படுத்துவது.